# “போதையற்ற ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்”

என்ற தலைப்பில் இவ்வாற ஜும்ஆ குத்பாவை (16.10.2026) அமைத்துக் கொள்ளுமாறு அனைத்து கதீப்மார்களிடம் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கேட்டுக் கொள்கின்றது.

الحمد لله نحمده ونستعينه ونستغفره، ونعوذ بالله من شرور أنفسنا ومن سيئات أعمالنا، من يهده الله فلا مضل له ومن يضلل فلا هادي له.وأشهد أن لا إله إلا الله وحده لا شريك له، وأشهد أن محمداً عبده ورسوله. اللهم صل وسلم وبارك على سيدنا محمد وعلى آله وصحبه أجمعين.

أما بعد أيها الإخوة في الله، اتقوا الله حق التقوى، وراقبوه في السروالنجوى، واعلموا أن من أعظم نعم الله على الإنسان أن وهبه جسداً وعقلاً، وأمره بحفظهما من كل ضرروهلاك.

قال الله تعالى: وَلَا تَقْتُلُوا أَنْفُسَكُمْ إِنَّ اللَّهَ كَانَ بِكُمْ رَحِيمًا (سورة النساء: 29)

وقال سبحانه: وَلَا تُلْقُوا بِأَيْدِيكُمْ إِلَى التَّهْلُكَةِ (البقرة: 195)

أيها الأحبة، المخدرات والمسكرات من أخطر ما يهدد الإنسان والمجتمع، فهي تدمر العقل الذي به نُكرم، وتضعف الجسد الذي به نعبد، وتفسد الأخلاق والعلاقات، وتفتح أبواب الجريمة والانحراف. وقد حرّم الإسلام كل ما يُذهب العقل ويضرّبالبدن.

قال النبي ﷺ: كل مسكر خمر، وكل خمر حرام“ (رواه مسلم - 5219)

وقال ﷺ: لا ضررولا ضرار” (سنن ابن ماجه - 2341)

إن مما لا غرو فيه ولا شك أن من مقاصد الرسالة المحمدية تحريم جميع ما يضر

الإنسان ويقوده إلى الهلاك والخسران

حيث قال المولى § يحل لهم الطيبات ويحرم عليهم الخبائث } الأعراف ١٥٧

المخدرات تُميت القلب، وتُضعف الإيمان، وتبعد الإنسان عن ذكر الله وعن الصلاة، وتجعل الشاب عبداً لشهوته وضعيف الإرادة أمام أصدقاء السوء.

أيها الإخوة في الإسلام،

إن من أعظم الجرائم وأشدّها خطراً أن يكون الإنسان سبباً في إفساد غيره، أو أن يتاجر بما يهلك عقول الشباب ويدمّر حياتهم.

قال الله تعالى: إِنَّ الَّذِينَ يُحِبُّونَ أَنْ تَشِيعَ الْفَاحِشَةُ فِي الَّذِينَ آمَنُوا لَهُمْ عَذَابٌ أَلِيمٌ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ (النور: 19)

وقال أيضا § ولا تعثوا في الأرض مفسدين } (الشعراء ١٨٣)

فكيف بمن لا يكتفي بمحبة الفساد، بل يزرعه في المجتمع، ويبيعه للشباب، ويهلك به أمة بأكملها؟

قال الله تعالى: وَاللَّهُ لَا يُحِبُّ الْفَسَادَ (البقرة: 205)

وقال جل شأنه: إِنَّ الْمُجْرِمِينَ فِي عَذَابِ جَهَنَّمَ خَالِدُونَ (الزخرف: 74)

ومن باع المخدرات أو ساهم في نشرها فهو من المفسدين في الأرض، المجرمين الذين يحاربون الله ورسوله، لأنهم يدمرون عقول الناس ويقتلون مستقبل الأمة.

قال الله تعالى: إِنَّمَا جَزَاءُ الَّذِينَ يُحَارِبُونَ اللَّهَ وَرَسُولَهُ وَيَسْعَوْنَ فِي الْأَرْضِ فَسَادًا أَنْ يُقَتَّلُوا أَوْ يُصَلَّبُوا... (المائدة: 33)

فليتّق الله كل من تورّط في بيع المخدرات أو نشرها، وليعلم أنه إن تاب قبل الموت تاب الله عليه، وإن أصرّ فويلٌ له من عذاب الله.

من سنّ في الإسلام سنة سيئة فعليه وزرها ووزر من عمل بها من بعده لا ينقص من أوزارهم شيء." (رواه مسلم - 1017)

أيها الأحبة، فلنتعاون جميعاً: العلماء، الأئمة، الآباء، المعلمون، والسلطات، لنحمي أبناءنا، ونطهر مجتمعنا من هذا الداء الخطير. ولنذكّر الشباب أن السعادة الحقيقية في طاعة الله، لا في الهروب من الو اقع بالمخدرات.

قال ﷺ: المؤمن القوي خيروأحب إلى الله من المؤمن الضعيف" (رواه مسلم - 2664)

فلنكن أقوياء بالإيمان، نقياء بالأخلاق، أحراراً من عبودية الشهوات والسموم

أيها الأحبة،

إن مسؤوليتنا كبيرة أمام الله في تربية أبنائنا، ومر اقبة أصدقائهم، وغرس الإيمان في قلوبهم منذ الصغر، وإشغال أوقاتهم بما ينفع من علمٍ ورياضةٍ وعبادةٍ.

يقول الله تعالى: يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا قُوا أَنْفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا (التحريم: 6)

أيها الأحبة في الله،

يجب أن نفهم لماذا شبابنا يقعون في فخ المخدرات والتدخين وسوء العادات:

- ضعف الإيمان والفراغ الروحي.
- غياب القدوة الصالحة والتوجيه الأسري.
- ضغط الأصدقاء والإعلام الفاسد.
- البطالة واليأس من المستقبل.

والحل يبدأ بالإيمان القوي، والارتباط بالمسجد، والصحبة الصالحة، والتوبة إلى الله، والانشغال بالأعمال النافعة.

قال النبي ﷺ: سبعة يظلهم الله في ظله... وشاب نشأ في عبادة الله (صحيح البخاري - 660)

فلنكن من الذين ينشئون أبناءهم على الطاعة والعفة، ولنحارب هذه الآفة بكل الوسائل المشروعة:

بالتربية، بالتوعية، بالتعاون بين الأسرة والمسجد والمدرسة والمجتمع.

قال ﷺ: المؤمن للمؤمن كالبنيان يشد بعضه بعضًا" (رواه البخاري - 481)

فلنكن صفاً واحداً لحماية شبابنا ومجتمعنا، ولندعُ الله أن يحفظ أبناءنا من كل شرّ.

உலகில் பல்வேறுபட்ட பிரச்சினைகள், சீர்கேடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை நாம் அறிவோம். இதில் குறிப்பாக போதை வஸ்துப் பாவனை இன்றைய உலகை அழிவின் பக்கம் அழைத்துச் செல்கின்றது. இப்பாவனைக்கு மாணவர்கள் முதல் சிறார்கள், வாலிபர்கள், முதியவர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட சமூகத்தின் பல தரப்பினரும் அடிமையாகியுள்ளனர்.

போதை வஸ்துப் பாவனையினால் தற்கொலை, கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற மிகப் பெரும் கொடூர குற்றச் செயல்கள், சமூக சீர்கேடுகள் மற்றும் விபத்துக்கள் பெருகி வருகின்றன. அவ்வாறே சிறைச்சாலைகள், வைத்தியசாலைகள் என்பவற்றில் போதைவஸ்துக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை அதிகரிருத்திருப்பதை காணமுடியும். இதனை இல்லாதொழிக்க சம்பந்தப்பட்டவர்கள் பல்வேறுபட்ட மட்டங்களிலும் பல வகையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் இவ்வாறான சூழ்நிலையில் போதைவஸ்துப் பாவனையினால் ஏற்படும் அழிவிலிருந்து சமூகத்தையும் தேசத்தையும் பாதுகாக்கும் பொருட்டு இது தொடர்பாக பொதுமக்களுக்கு உணர்த்துவதும் எச்சரிப்பதும் உலமாக்களது தலையாய பொறுப்பாகும்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, அதன் இளைஞர் விவகாரப் பிரிவின் மூலம், போதைப் பொருட்களுக்கு அடிமையானோரின் பிரச்சினைகள் குறித்து ஆலிம்கள் மற்றும் துரைசார்ந்தோருக்கு பயிற்சிகள் வழங்கி, அப்படிப்பட்டவர்களை

அதிலிருந்து மீட்பதற்கான நடவடிக்கைகளை நாடளாவியரீதியில் மேற்கொண்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## போதை வஸ்துக்கள் பாவனை :

அல்லாஹு தஆலா தனது அடியார்களுக்கு உண்ணல், பருகல் விடயங்களில் நல்லவற்றை ஆகுமாக்கி, தீங்கை ஏற்படுத்தக்கூடிய அனைத்து விடயங்களையும் தடுத்துள்ளான்.

இது தொடர்பாக அல்லாஹு தஆலா பின்வருமாறு அருளுகின்றான்:

“(நபியே!) அவர்கள் (உண்பதற்குத்) தங்களுக்கு ஹலாலான (அனுமதிக்கப்பட்ட) வை எவை என்று உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறும்: உங்களுக்கு ஹலாலானவை, சுத்தமான நல்ல பொருள்களும் அல்லாஹ் உங்களுக்குக் கற்பித்திருக்கிறபடி வேட்டையாடும் பிராணி, பறவைகளுக்கு நீங்கள் பயிற்சியளித்து அவை வேட்டையாடி நீங்கள் பெற்றவையும் புசியுங்கள். எனினும், நீங்கள் (வேட்டைக்கு விடும்போது) அதன் மீது அல்லாஹ்வின் பெயரைக்கூறி விடுங்கள்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் கணக்கெடுப்பதில் மிகவும் விரைவானவன்.” (சூரா அல்மாஇதா: 04).

மனிதனுக்கு தீங்கு விளைவித்து அவர்களது புத்தியை பேதளிக்கச் செய்யும் ஒரு மோசமான பொருளே போதைவஸ்தாகும். போதையை ஏற்படுத்தக்கூடிய அனைத்தும் அவை எப்பெயரில் அழைக்கப்பட்டாலும் மார்க்கத்தில் தடுக்கப்பட்டதாகும். அவற்றில் மட்டிடமுடியாத அளவு தீங்குகளும் சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையான பாரிய ஆபத்துகளும் மறைந்திருக்கின்றன.

1. **போதைவஸ்துப் பாவனை ஷைத்தானின் தூண்டுதலில் உள்ளதாகும். மேலும் அது விரோதத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தும்.**

அல்லாஹு தஆலா அருளுகின்றான்:

“ஈமான் கொண்டோரே! மதுபானமும் சூதாட்டமும் விக்கிரகங்களை வழிபடுதலும் அம்புகளெறிந்து குறி கேட்பதும் ஷைத்தானின் அருவருக்கத்தக்க

செயல்களிலுள்ளவையாகும். ஆகவே, நீங்கள் அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்; அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்.” (சூரா அல்மாஇதா: 91)

**2. போதைவஸ்துப் பாவனை அனைத்துப் பாவங்களினதும் அடிப்படையாகும்.**

அபூதர்தா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனக்கு, “மது அருந்தாதீர்; அது அனைத்துத் தீமைகளின் திறவுகோலாகும்” என்று வஸிய்யத் செய்தார்கள். (இப்னு மாஜா: 3371)

**3. போதை வஸ்துப் பாவனையும் இறை நம்பிக்கையும் ஏக காலத்தில் ஒன்றுசேரமாட்டாது.**

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " لاَ يَزْنِي الزَّانِي حِينَ يَزْنِي وَهُوَ مُؤْمِنٌ وَلاَ يَشْرَبُ الْخَمْرَ شَارِبُهَا حِينَ يَشْرَبُهَا وَهُوَ مُؤْمِنٌ وَلاَ يَسْرِقُ السَّارِقُ حِينَ يَسْرِقُ وَهُوَ مُؤْمِنٌ وَلاَ يَنْتَهِبُ نُهْبَةً يَرْفَعُ النَّاسُ إِلَيْهِ فِيهَا أَبْصَارَهُمْ حِينَ يَنْتَهِبُهَا وَهُوَ مُؤْمِنٌ ". (صحيح البخاري 2475)

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ‘ஒரு விபச்சாரி, தான் விபச்சாரம் புரியும்போது மு∴மினாக இருப்பதில்லை. மேலும், ஒருவன் மது அருந்தும்போது மு∴மினாக இருப்பதில்லை. ஒருவன் திருடும்பொழுது மு∴மினாக இருப்பதில்லை. ஒருவன் மக்கள் பார்த்துக் கொண்டிருக்க, (பிறரின் பொருளை அபகரித்துக்) கொள்ளையடிக்கும் போது மு∴மினாக இருப்பதில்லை” என அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள். (புகாரி: 2475)

**4. போதை வஸ்துக்களை விற்பனை செய்வதும் மார்க்கத்தில் தடுக்கப்பட்டதாகும்.**

போதை வஸ்துக்களைப் பாவிப்பது மார்க்கத்தில் எவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளதோ அவ்வாறே அவற்றை விற்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் கூறியதாவது: “அல்பகறா” அத்தியாயத்தின் (வட்டி தொடர்பான) இறுதி வசனங்கள் அருளப்பெற்றபோது,

அல்லாஹ்வின் தூதர் அவர்கள் புறப்பட்டுச் சென்று அவற்றை மக்களுக்கு ஓதிக் காட்டினார்கள். பிறகு மதுபான வியாபாரத்தைத் தடை செய்தார்கள்.” (ஸஹீஹு முஸ்லிம்: 3221)

**5. போதை வஸ்தைப் பாவிப்பவன் சுவர்க்கம் நுழைய மாட்டான்**

**عن عبد الله عمرو أن النبي صلى الله عليه وسلم قال لَا يَدْخُلُ الْجَنَّةَ مَنَّانٌ، ولا عَاقٌّ، وَلَا مُدْمِنُ خَمْرٍ" النسائ: 5672**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: “பிறருக்குச் செய்த உபகாரத்தைச் சொல்லிக்காட்டுபவன், பெற்றோரைப் புண்படுத்துபவன், மது அருந்துபவன் ஆகிய மூவரும் சுவர்க்கத்தில் நுழைய மாட்டார்கள்” என அப்துல்லாஹ் இப்னு அம்ர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நஸாஈ: 5672)

**6. போதைவஸ்தும் அதனுடன் தொடர்புடையோரும் சபிக்கப்பட்டவர்களாவர்.**

**عَنْ عَبْدِ اللهِ بْنِ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ، عَنْ أبيه عن النبي صلى الله عليه وسلم قال لَعَنَ اللهُ الْخَمْرَ، وَلَعَنَ شَارِبَهَا، وَسَاقِيَهَا، وَعَاصِرَهَا، وَمُعْتَصِرَهَا، وَبَائِعَهَا، وَمُبْتَاعَهَا، وَحَامِلَهَا، وَالْمَحْمُولَةَ إِلَيْهِ، وَآكِلَ ثَمَنِهَا " (مسند أحمد: 5716)**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: “மதுபானமும் அதை அருந்துபவர், அதைப் பரிமாறுபவர், அதை விற்பவர், அதை வாங்குபவர், அதை எடுத்துச்செல்பவர், யாருக்காக எடுத்துச் செல்லப்படுகிறதோ அவர், அதைத் தயாரிப்பவர், அதைத் தயாரிக்கச் சொன்னவர், அதன் கிரயத்தை உண்பவர் ஆகிய அனைவரையும் அல்லாஹ் சபித்துள்ளான்.” (முஸ்னத் அஹ்மத்: 5716)

**7. இறுதிக்காலத்தில் மதுவுக்கு வேறு பெயர்கள் சூட்டி அதை அருந்துவார்கள்.**

**أَبَا مَالِكٍ الْأَشْعَرِيَّ صَاحِبَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يُحَدِّثُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنَّهُ قَالَ: «لَيَشْرَبَنَّ أُنَاسٌ مِنْ أُمَّتِي الْخَمْرَ يُسَمُّونَهَا بِغَيْرِ اسْمِهَا، وَيُضْرَبُ عَلَى**

رُءُوسِهِمْ بِالْمَعَازِفِ وَالْقَيْنَاتِ، يَخْسِفُ اللهُ بِهِمُ الْأَرْضَ، وَيَجْعَلُ مِنْهُمُ الْقِرَدَةَ وَالْخَنَازِيرَ (المعجم الكبير 3419)

அபூமாலிக் அல்அஷ்அரீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதைத் தாம் கேட்டதாகக் கூறினார்கள்: "எனது உம்மத்தில் சிலர் மதுபானத்திற்கு வேறு பெயர்களைச் சூட்டிக்கொண்டு அருந்துவார்கள்." (அல்மு.ஃ.ஜமுல் கபீர்: 3419)

**8. போதைவஸ்துக்களை விற்பனை செய்வது தடுக்கப்பட்டதாகும்.**

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ، عَنْ أبيه عن النبي صلى الله عليه وسلم قال لَعَنَ اللهُ الْخَمْرَ، وَلَعَنَ شَارِبَهَا، وَسَاقِيَهَا، وَعَاصِرَهَا، وَمُعْتَصِرَهَا، وَبَائِعَهَا، وَمُبْتَاعَهَا، وَحَامِلَهَا، وَالْمَحْمُولَةَ إِلَيْهِ، وَآكِلَ ثَمَنِهَا " (مسند أحمد: 5716 )

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: "மதுபானமும் அதை அருந்துபவர், அதைப் பரிமாறுபவர், அதை விற்பவர், அதை வாங்குபவர், அதை எடுத்துச்செல்பவர், யாருக்காக எடுத்துச் செல்லப்படுகிறதோ அவர், அதைத் தயாரிப்பவர், அதைத் தயாரிக்கச் சொன்னவர் அதன் கிரயத்தை உண்பவர் ஆகிய அனைவரையும் அல்லாஹ் சபித்துள்ளான்." (முஸ்னத் அஹ்மத்: 5716)

போதைவஸ்துக்களை விற்பனை செய்து சம்பாதிக்கும் பணம் ஹராமானதாகும். அவ்வாறானவர்கள் அல்லாஹ்வின் சாபத்துக்கு ஆளாகின்றனர். அவர்கள் தன்னையும் சமூகத்தையும் தேசத்தையும் அழிவின் பக்கம் இட்டுச் செல்கின்றார்கள். எனவே, அவர்கள் அல்லாஹ்வைப் பயந்து நடந்து கொள்ள வேண்டும். இப்படியானவர்கள் விடயத்தில் பொறுப்பானவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போதைவஸ்துக்கு அடிமையாகுவதற்கான காரணம்:

இன்று எத்தனையே நபர்கள் குறிப்பாக பல வாலிபர்கள் விரும்பியோ விரும்பாமலோ போதைவஸ்துக்கு அடிமையாகியுள்ளனர். அதற்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றில்,

- அறியாமை

போதைவஸ்துவினால் ஏற்படும் அற்ப இன்பத்தை கருத்திற்கொண்டு அதனால் ஏற்படும் பாரிய விபரீதத்தை அறியாமல் ஈடுபடுகின்றனர்.

- தீய நண்பர்கள்

கெட்ட நண்பர்களின் தூண்டுதலினாலும் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாகி விடுகின்றனர். தீய நண்பர்களை எடுத்துக் கொண்டவர்கள் நாளை மறுமைநாளில் அது பற்றி கவலைப்படுவார்கள்.

அல்லாஹு தஆலா அளுகின்றான்:

يٰوَيْلَتٰى لَيْتَنِىْ لَمْ اَتَّخِذْ فُلَانًا خَلِيْلًا )الفرقان:28(

“எனக்கு வந்த கேடே! (என்னை வழி கெடுத்த) ஒருவனை நண்பனாக ஆக்கிக் கொள்ளாது இருந்திருக்க வேண்டாமா?”

- போதைவஸ்துக்களை பாவிப்பதனால் உடல் ஆரேக்கியமும் தாம்பத்திய உறவில் உற்சாகமும் ஏற்படும் எனும் தவறான சிந்தனை.
- பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களின் கவனமின்மை.
- மன அழுத்தங்கள்

**போதைப் பொருட்களைப் பாவிப்பதனால் ஏற்படும் விபரீதங்கள்**

- அல்லாஹ்வின் சாபத்துக்கு ஆளாகுவதுடன் அவனது ரஹ்மத்தை விட்டும் தூரமாகுதல்
- சுவர்க்கத்துக்கு நுழைவதற்கு தடையாக ஆகுதல்
- ஆரோக்கியமற்ற வாழ்வு, புத்தியை இழக்க நேரிடுதல்
- சமூகத்தில் மதிக்கப்படாதவராக மாறுதல்

- குடும்பப் பிரச்சினை ஏற்படுதல், குடும்பத்தின் நற்பெயருக்கு பங்கம் ஏற்படுதல்

போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களை இனங்கண்டு அதிலிருந்து விடுவிப்பதற்கான முயற்சி செய்தல்

- மதஸ்தலங்கள், மதக் கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் என்பன போதைப் பொருள் பாவனையின் பாரதூரம், பாதக விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்கள், இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துதல்.
- போதைப் பொருள் பாவனையாளர்களை விஷேடமாக இனங்கண்டு, அவர்களை சீர்திருத்துவதற்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்களினூடாக முயற்சிகளை மேற்கொள்ளல்.
- போதைப் பொருள் பாவனையாளர்களால் மகளிர் மற்றும் சிறுவர்கள் பாதிக்கப்படும் போது நிவாரணம் பெறுவதற்கான வசதிகளையும் வழிமுறைகளையும் ஏற்படுத்துதல்.

குறிப்பு : குத்பாப் பிரசங்கத்தில் போதைப் பொருட்களின் பெயர்களைக் குறிப்பிடுவதைத் தவிர்ந்து கொள்வதுடன் இதில் சம்பந்தப்பட்டவர்களை நேரடியாகத் தாக்குவதைத் தவிர்த்து நளினமான முறையிலும் நடுநிலையைப் பேணியும் குத்பாப் பிரசங்கத்தை அமைத்துக் கொள்ளல்.

**اللهم تب على العصاة، واهد المذنبين، واشفِ المدمنين، وردّ شباب المسلمين إليك ردّاً جميلاً.**

**اللهم احفظ بلادنا و أبناءنا من المخدرات والفواحش والمنكرات.**

**اللهم اجعلنا من الذين يستمعون القول فيتبعون أحسنه**

**اللهم احفظ شباب من الفتن والمخدرات والمعاصي.**

**اللهم قوِّ إيمانهم، واملأ قلوبهم بنور الهداية.**

**اللهم اشفِ المدمنين، وردّهم إليك ردّاً جميلاً.**

**اللهم اجعل مجتمعنا طاهراً نقياً، خالياً من الشروروالآفات.**

آمين يا رب العالمين.

وآخر دعوانا أن الحمد لله رب العالمين.